**திறன்கள் துறை அபிவிருத்தி செயற்திட்டம் - 2019**

திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மே 27 ஆந் திகதிய 3119 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) மற்றும் 3120 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் 4.04(அ) பிரிவின் IV ஆம் உறுப்புரையின் பிரகாரம் மற்றும் 2018 மே 11 ஆந் திகதிய 3650 எஸ்ஆர்ஜ (சீஓஎல்) மற்றும் 3651 (எஸ்ஆர்ஜ) மேலதிக நிதி ஏற்பாடுகளின் பிரகாரமும் 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 5516 எல்கே மற்றும் 5517 எல்கே ஆம் இலக்க உடன்டிக்கையின் 2 ஆம் பட்டியல் 11 பீ.3 ஆம் பிரிவிலுள் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கல் ஆவணம் மற்றும் நிதி உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு நிறைவேற்றல் முகவராகக் காணப்படுகின்றதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாக 10 நிறுவனங்கள் காணப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊழியர் சந்தை கேள்வியை எதிர்கொள்வதற்கு வினைத்திறனான கல்வி முறைமையை கட்டியெழுப்புதல் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி மற்றும் ஆதரவான கொள்கைகள், முறைமைகள் மற்றும் கட்டமைப்புக்கள் போன்றவற்றிற்கான தரம், பொருத்தத் தன்மை, அணுகுதல் இனங்காணல் போன்வற்றை மேம்படுத்துதல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் விளைவு அடிப்படையிலான கடனளிப்பு முறையின் மூலக்கூறின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன. ஆசிய அபிவிருத்தி வங்கியில் ஒதுக்கப்பட்ட மேலதிக நிதியத்துடன் நிகழ்ச்சித்திட்ட அமுல்படுத்தல் ஆவணத்தின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 141,524.23 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 1,061.2 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 28,708.23 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் மற்றும் ரூபா 13,100 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் முறையே ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்தி கழகத்தினாலும் நிதியளிக்கப்பட வேண்டுமென இணங்கப்பட்டது. மீதியில் ஐ.அ.டொலர் 761.2 மில்லியன் முறையே ஜேர்மன் அரசாங்கம், கொரியாவின் எக்ஸிம் வங்கி ஏனையவை மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2014 செப்தம்பரில் ஆரம்பித்திருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்படவேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த செலவீனத்தின் ஒன்றிணைந்த செலவினக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில்

நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத்தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் செயற்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

செயற்திட்டம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப்

பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தோகை | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபை, தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு, இலங்கை அச்சகத் திணைக்களம் ஆகிய அமுல்படுத்தல் முகவர்களின் நிதிக்கூற்றுக்கள் 2020 செப்தெம்பர் 08 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | ஒன்றிணைந்த செலவினக் கூற்றுக்களில் தொடர்புடைய அமுல்படுத்தல் முகவர்களின் கீழ் வழங்கப்பட்ட நிதித் தகவல் இணக்கஞ் செய்ய முடியாதிருந்தது | ஆரம்ப மீதிகளின் வித்தியாசங்கள் மற்றும் 2020 செப்தெம்பர் 17 அளவில் மீள சமர்ப்பிக்காமை போன்ற காரணங்களால் பொதுக்கணக்காய்விற்கு இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபையின் 2019.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களானது 2020 செப்தெம்பர் 24 வதாக | பிரதம நிதி உத்தியோகத்தரினால் ஒன்றிணைந்த செலவினக் கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவலின் துல்லியத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளினை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்ட சபைகடகூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுமென நைற்றா அறிவித்திருந்தது. | |
| (ஆ) | செலோன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த தீர்க்கப்படாத முற்பணங்கள் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களின் 3.4 ஆம் குறிப்புக்களின் பிரகாரம் காசு மற்றும் காசுக்கு சமனாக கருதாமை ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களில் செலவினங்களாக கருதப்பட்டிருந்தது. | 5.35 மில்லியன் | ஒருங்கிணைந்த வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் உள்ள மொத்த செலவினம் கூட்டிக் காட்டப் பட்டிருந்தது. | செலோன் ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனமானது கணக்காய்வு அவதானங்களுடன் இணங்குகின்றது. எதிர்காலத்தில் ஏற்படுகின்ற அத்தகைய தவறுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பிழைகளை திருத்த வேண்டியுள்ளது. |
| (இ) | செலோன் ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தால் உருவாக்கப்பட்ட ரூபா 2.63 மில்லியன் மொத்த ஏனைய வருமானம் ஒருங்கிணைந்த வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. | 1.2 மில்லியன் | மேலதிகக் கூற்றுக்கள் | செலோன் ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனமானது கணக்காய்வு அவதானங்களுடன் இணங்குகின்றது. எதிர்காலத்தில் ஏற்படுகின்ற அத்தகைய தவறுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவீனக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பிழைகளை திருத்த வேண்டியுள்ளது. |
| (ஈ) | நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களின் 3.1 ஆம் குறிப்புக்கள் குறிப்பிடப்பட்டிருந்ததன் பிரகாரம் நிகழ்ச்சித் திட்டத்தில் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களில் நிதித் தகவல்களானது காசு அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. | | நிதித்தகவல் களிலுள்ள போதியதற்ற வெளிப்படுத்தல் | இலங்கை அச்சிடல் நிறுவனம் கணக்காய்வு அவதானிப்புடன் இணங்காமை. | ஒருங்கிணைவதற்கு முன்னர் அமுல்படுத்தல் முகவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் தகவல்களின் சரியானதன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எனினும், உள்ளபடியான அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இலங்கை அச்சிடல் நிறுவகத்தின் வருமானம் மற்றும் செலவின விபரங்களை நிகழ்ச்சித் திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | | | | |
| (உ) | இலங்கை அச்சிடல் நிறுவகத்தின் முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய வருமானம் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றில் மீளாய்வாண்டிற்கான வருமானமாக தவறாக காட்டப்பட்டிருந்தது. | 21.47 மில்லியன் | பொருத்தமற்ற வெளிப்படுத்தல் | இலங்கை அச்சிடல் நிறுவகம் கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றமை. | பிழைகளை திருத்த வேண்டிய தேவையுள்ளது. |
| (ஊ) | நிகழ்ச்சித் திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களிலும் மூன்றாம் மற்றும் தொழில்சார் கல்வி சபையின் வருமானம் மற்றும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகைக்கும் இடையில் ரூபா 3000 இலிருந்து ரூபா 4,971,000 வரையிலான செலவினத்தில் பதினேழு விடயங்களிற்கிடையில் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது. | | ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களில் சரியாக நிதித் தகவல்கள் காட்டப்பட்டிருக்க வில்லை. | மூன்றாம் மற்றும் தொழில்சார் கல்வி சபையுடன் தொடர்புடைய ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றிலும் அது தொடர்பில் சபையால் கொடுக்கப்பட்ட நியாயப்படுத்தலிற்கும் இடையில் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது. | பிரதம நிதி அலுவலகரால் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் வகையில் சரியான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்

| இல. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் | அடையப் பெற்ற பௌதீக செயலாற்றல் | | | | |
| (அ) | தேசிய இளைஞர் சேவைகள் கழகத்தின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பயிற்சி பாடநெறிகளின் தரத்தினை உயர்த்தும் நோக்குடன் திறன்கள் அபிவிருத்தி துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 70.10 மில்லியன் தொகை ஒதுக்கப் பட்டிருந்தது. | 62.05 சதவீதத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ரூபா 43.50 மில்லியன் மாத்திரம் 2019 இன் இறுதியளவில் செலவழிக்கப் பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைய முடிந்திருக்க வில்லை. | தரப் பயிற்சிக்கான கேள்வியினை பூர்த்தி செய்ய முடிந்திருக்க வில்லை. | தேசிய இளைஞர் சேவைகள் சபைக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 70.10 மில்லியனை வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒதுக்கீடு செய்த போதும் இந்த ஒதுக்கீடு நிர்மாண வேலைகளை முடிப்பதில் காலதாமதம் ஏற்பட்டமையால் பயன்படுத்த முடிந்திருக்கவில்லை. | நிர்மாண முகாமைத்துவத்திலுள்ள தவறுகள் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு குறைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சர்வதேச அபிவிருத்தி கழகத்தின் 5516 எல்கே ஆர் ஆம் இலக்க மற்றும் 5517 எல்கேஆர் ஆம் இலக்க கடன் | | | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை | 2017 நவம்பர் இல் இடைத் தவணை மீளாய்வுடனான | நிதியங்களை பயன்படுத்துவதில் |

| | | | |
|---|---|---|---|
| உடன்படிக்கைகள் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு எஸ்டீஆர் 65,700,000 ஐ மீள் வழங்குவதற்கு இலக்கிடப்பட்டது. எனினும், 52.24 சதவீதத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற எஸ்டீஆர் 34,320,000 வழங்கப்பட்டிருந்ததுடன் 08 பங்கீட்டு இணைப்பு குறிகாட்டிகளின் கீழ் அமுல்படுத்து வதற்கிருந்த 17 வேலைகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் கடனின் செல்லுபடியாகும் காலப்பகுதி காலவதியடைந்த போதிலும் அடையப்பட்டிருக்க வில்லை. | அடைய முடிந்திருக்க வில்லை. | பூர்த்தியாக்கலுடன் டீஎல்ஜ இன் புதிய தொகுதிகளுடன் நிகழ்ச்சித் திட்ட நடவடிக்கைகளை மீளமைப்பதற்கு உலக வங்கி பிரேரணை செய்திருந்தது. உலக வங்கியானது 2017 ஆம் ஆண்டு காலப்பகுதிக்காக முன்னர் காத்திருக்கின்ற இரண்டு டீஎஸ்ஜஎல் க்கு மாத்திரம் வழங்குவதற்கு இணங்கப்பட்டதுடன் பழைய டீஎஸ்ஜக்கள் மிது மேலும் மீள் வழங்குவதற்கு நிறுத்தப்பட்டிருந்தது. எனினும், உலக வங்கி மற்றும் இலங்கை அரசால் சிபாரிசு செய்யப்பட புதிய மீளமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக உடன்படிக்கையொன்றை அடைய முடிந்திருக்கவில்லை. ஆகையால், வங்கிசீரான 2017 ஆம் ஆண்டு காலப்பகுதிக்காக காத்திருக்கின்ற டீஎல்ஜக்களின் பங்கீட்டின் பின்னர் 2018 இல் நிறுத்தப்பட்டிருந்தது. இது முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வினைத் திறமையின்மை காட்டப்பட்டமையால், முகாமைத்துவமானது ஏடீபீ இன் கடன் உடன்படிக்கையின் டீஎல்ஜ க்களின் மிகுதி நடவடிக்கைகளின் இலக்குகளை அடைவதற்கு தேவையான நடவடிக்கை மற்றும் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | தேசிய இளைஞர் சேவைகள் கழகத்தின் விரிவான செயற்பாட்டு திட்டத்தின் பிரகாரம் வருடாந்தம் 4.8 மில்லியனை ஏற்படுத்துவதன் மூலம் தேவையான பயற்சியாளர்களுக்கு 100 உதவித் தொகை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் 2014 தொடக்கம் 2020 காலப்பகுதிக்காக அதற்காக ரூபா 33.6 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், 2019 திசெம்பர் 31 வரையிலும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அம்படுத்துவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை | நிதிப் பிரச்சினைகளை கொண்டுள்ள மாணவர்கள் இந்த தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிற்கு உள்வாங்கப்பட்டிக்க வில்லை. | 2014-2020 காலப் பகுதிக்கான விரிவான ரீபீஈரீ துறை செயல் நடவடிக்கை திட்டம் இருந்த போதிலும் தேவையான பயிற்சியாளர்களிற்கான உதவித் தொகை கொடுப்பனவை வெளிப்படுத்துகின்ற போதும் திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2014-2020 காலப்பகுதிக்கான எஸ்உஸ்டீபீயின் விரிவான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் என்வைசீசி இலுள்ள தேவையான பயிற்சியார்களிற்கான உதவித் தொகையை நிதியங்களிற்கு பொறுப்பிலிருந்திருக்கவில் லை. | இந்த செயற்பாடானது நிகழ்ச்சித்திட்ட நிதியிடலை பயன்படுத்தி அமுல்படுத்தப்பட வேண்டியிருக்கும். |
| (ஈ) | தேசிய இளைஞர் சேவைகள் சபையின் விரிவான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், பாடநெறி கட்டணங்களை அறவிடுவதற்காக கொள்கையொன்றை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டப்பட்டது. எனினும், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு சபை சபையினால் கொள்கையொன்றை அபிவிருத்தி செய்வதற்கும் அதன் பயிற்சி நிலையங்களில் நடாத்தப்பட்ட நிலையங்களில் ஒரேமாதிரியான பயிற்சி பாடநெறிகளிற்காக வேறுபட்ட கட்டணங்களை அறவிடுவதற்கும் இயலாதிருந்தது. | என்வைஎஸ்சி ஆல் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் கேள்வியினை இது பாதகமாக பாதித்திருந்தது | 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலப்பரீட்சையிடமிருந்து என்வைஎஸ்சீ ஆல் நடாத்தப்பட்ட முழு நேர பகுதி நேர மற்றும் குறுகிய கால பாடநெறிகளின் பாடநெறிக் கட்டணங்களை ஒழுங்கு படுத்துவதற்கு ஒழுங்குபடுத்தல் கள் மேற்கொள்ளப் பட்டு | முறைமையை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வருகின்றது. | |
| (உ) | தேசிய இளைஞர் சேவைகள் சபையின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், கல்விசார் பதவியணியின் 80 சதவீதம் திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 55 அறிவுறுத்தாளர் களை ஆட்சேர்ப்பதன் மூலம் அதிகரிக்கப் பட வேண்டும். எனினும், 34 அறிவுறுத்தாளர் மாத்திரம் 2019 திசெம்பர் 31 வரையிலும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | பயிற்சியின் தரத்தை உயர்த்த முடியாதிருந்தது. | என்வைஎஸ்சீயிலுள்ள அறிவுறுத்தாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியுடன் இணங்குவதற்காக 65 ஆட்சேர்ப்புக்கள், 2019 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்டது. 34 அறிவுறுத்தாளர்கள் 2019 ஆண்டின் மீது தொழில்சார் பயிற்சி துறைக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். 31.08.2020 இல் உள்ளவாறு என்வைஎஸ்சீ அறிவுறுத்தாளர் பதவியணி 82 பூர்த்தியடைந்திருந்தது. | பயிற்சி தேவைகளை பூர்த்தி செய்வதற்கு செய்வதற்கு போதிய மற்றும் தகுதி வாய்ந்த கல்விசார் உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல. | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் சபையால் தயாரிக்கப்பட்ட விரிவான செயற்திட்ட திட்டத்தின் பிரகாரம், தரம் உறுதியாக்கப்பட பாடநெறிகளை ரூபா 611 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்துடன் வழங்குவதற்கு வேண்டப்பட்ட மேலதிக 1700 மாணவர்களுக்கு பயிற்சி வசதிகளை வழங்குவதற்கு10 பயிற்சி பாடநெறிகள் நாளதுவரையாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் 06 பயிற்சி நிலையங்களின் நிர்மாண வேலைகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 438 மில்லியனை செலவழிப்பதன் மூலம் தொடங்கப்பட்டிருந்தது. 02 பயிற்சி நிலையங்களின் நிர்மாண வேலைகளில் ஒப்பந்தக்காரர்களின் மந்தமான செயலாற்றலால் ரூபா 114.9 மில்லியனை செலவழித்த பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது. மேலும், 01 பயிற்சி நிலையங்களின் நிர்மாண வேலைகள் வேலைகளின் மெதுவான செயன்முறையில் ரூபா 50.3 மில்லயனை ஏற்படுத்திய பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது. | என்வைஎஸ்சீ இல் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் கேள்வியினை பயிற்சி வசதிகள் இல்லாமை பாதகமாக பாதிக்கும். | 10 பயிற்சி நிலையங்களினை நவீனமயப்படுத்து வதற்கு எதிர்பார்க்கப்பட்ட என்வைஎஸ்சீ யின் விரிவான செயல் நடவடிக்கை திட்டம் இருந்த போதும், திறன்கள் துறை அபிவிருத்தி பிரிவில் ஒதுக்கப்பட்ட நிதியங்களுடன் 06 பயிற்சி நிலையங்களை இனை நவீனமயப்படுத்து வதற்கு இயலாமையிருந்தது. அதற்கிணங்க, 03 பயிற்சி நிலையங்களின் நவீனமயமாக்கலான து பூர்த்தியாக்கப்பட்டு பாநெறிகள் தொடங்கப்பட்டிருந்த து. | ஒப்பந்தக்காரர்களிற்கு ஒதுக்கப்பட சிவில் வேலைகள் தொடர்பில் தொடர்ச்சியான மேற்பார்வை மேற்கொள்வதற்கு கூடிய கவனம் தேவைப்படுகின்றது. |
| (ஆ) | 2014 ஆகஸ்ட் 05 இல் இரத்மலானை மற்றும் ஹெறானாவிலுள்ள பயிற்சி | தொழில்சார் பயிற்சியின் கேள்விகள் | நிர்மாணங்களிலுள்ள காலதாமதத்திற்காக பல காரணங்கள் | நிர்மாண வேலைகளை துரிதப்படுத்துவதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிலையங்களிற்காக இரண்டு புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் இந்த இரண்டு கட்டிடங்களின் நிர்மாண வேலைகளை 2019 ஏப்ரல் மற்றும் மார்ச் இல் பூர்த்தி செய்வதற்கு பட்டியல்படுத்துவதற்கு அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் எந்தவொரு நிர்மாணங்களையும் பூர்த்தி செய்ய முடிந்திருக்கவில்லை. மேலும் இவ்வாறான மற்றும் ரத்மலானை கட்டிடங்களின் பௌதீக செயன்முறை முறையே 85 சதவீதம் மற்றும் 45 சதவீதமாகவிருந்ததுடன் ரூபா 295.77 மில்லியன் தொகை 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்படுத்தப்பட்டிருந்தது. | நிர்மாண வேலைகளின் காலதாமதங்களின் பூர்த்திசெய்ய முடியாதிருந்தது. | அமுல்படுத்தும் முகவரால் குறிப்பிடப்பட்டிருந்தது. | முகாமைத்துவ கவனம் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தேசிய பயிலுனர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையானது 2016 திசெம்பர் இல் நிகழ்ச்சித்திட்ட நிதியங்களால் ரூபா 9.7 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் கவுலொக் ரவுன் சிற்றி அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கு இணங்கியிருந்தது. இது எதிர்பார்க்கப்பட்ட செயன்முறையை காட்டாமையால் நிகழ்ச்சித் திட்ட அலுவலகம் நிதியங்களை வழங்குவதற்கு நிகழ்ச்சித்திட்ட அலுவலகம் நிராகரித்ததுடன் தொடர்ச்சியான ஒப்பந்தக் காரரின் நிர்மாண வேலைகள் 2018 செப்தெம்பர் 26 இல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை வெற்றிகரமாக அடைய முடிந்திருக்கவில்லை. | நிர்மாணத்திலுள்ள தாமதத்திற்கான பல்வேறு காரணங்கள் அமுல்படுத்துதல் முகவரால் குறிக்கப்பட்டிருந்தது. | நிர்மாண வேலைகளிலுள்ள காலதாமதாமதத்திற்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதன் விளைவால், தேசிய பயிலுனர் மற்றும் தொழில்சார் பயிற்சி அதிகாரசபை உள்ளக நிதயத்தை பயன்படுத்தி வேறு ஒப்பந்தத்திற்கு வழங்கியிருந்தது. | | | |
| (ஈ) | தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் விரிவான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ரூபா 3,495 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 20 பயிற்சி நிலையங்களை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், 14 பயிற்சி நிலையங்களின் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிர்மாண வேலைகள் தொடங்கப்பட்ட 6 பயிற்சி நிலையங்களில் 4 பயிற்சி நிலையங்களின் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் பௌதீக செயன்முறையின் 30 சதவீதம் அடையப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக, ரூபா 3,935 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 90 பயிற்சி நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும் 27 பயிற்சி நிலையங்களில் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் 31 சதவீதம் செயல் முன்னேற்றத்தை அடைவதன் மூலம் ரூபா 857 மில்லியன் கிரயத்தில் | பயிற்சி நிலையங்களின் நிர்மாண வேலைகளில் ஏற்பட்ட கால தாமதங்களால் தொழில்சார் பயிற்சிகளின் கோரிக்கையை பூர்த்தி செய்ய முடிந்திருக்க வில்லை. | வீரீஏ இன் முகாமைத்துவமானது கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றது. இலங்கையின் தொழில் சார் பயிற்சி அதிகார சபையின் யெல் நடவடிக்கை திட்டத்தில் 20 புதியபயிற்சி நிலையங்களினை நிர்மாணிப்பதற்கு பட்டியலிடப்பட்ட போதும், 07 நிலையங்களின் நிர்மாணிப்பதற்காக பொதுத்திறைசேரியில் மட்டுப்படுத்தப்பட்ட நிதியத்தால் ஆரம்பிக்கப்பட்டது. 07 நிலையங்களால் 04 நிலையங்கள் பூர்த்தியாக்கப்பட்டது. | நிர்மாணிப்பதற்கும் நவீன மயப்படுத்துவதற்கு இனங்காணப்பட்ட பயிற்சி நிலையங்களின் சிவில் வேலைகளை துரிதப்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. |

பூர்த்தி
யாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 கள விஜயங்களின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | தேசிய இளைஞர் சேவைகள் கழகத்தின் பாணந்துறை, சிலாபம் மற்றும் இரத்மலானையில் அமைந்துள்ள பயிற்சி நிலையங்களானது 2013 இல் இனங்காணப்பட்ட 17 ஊழியர் சந்தை கேள்வி பாடநெறியினை தொடங்கும் நோக்குடன் நவீனமயப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் 10 பாடநெறிகள் மாத்திரம் தொடங்கப்பட்டிருந்தது. | திறமை வாய்ந்த ஊழியர்களிற்கான சந்தை கேள்வியானது பூர்த்தியாக்க முடிந்திருக்க வில்லை. | என்வைசீஎஸ்சீ ஆல் தெளிவுபடுத்தப்பட்ட துடன் பதிலானது செப்தெம்பர் 23 அளவிலும் சமர்ப்பிக்கப்படும். | முகாமைத்துவமானது எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (ஆ) | தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் 2014-2020 ஆம் ஆண்டு விரிவான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 20 பயிற்சி நிலையங்களில் 15,000 மாணவர்களை பயிற்றுவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும் மீளாய்வாண்டின் முதல் காலப்பகுதியில் 586 பயற்சியாளர்கள் மாத்திரம் பயிற்றுவிக்கப்பட்டிருந்தது. | திறன்கள் அபிவிருத்தி துறையின் பயிற்சி தேவைப்பாட்டினை பூர்த்தி செய்ய முடிந்திருக்கவில்லை. | பொதுத் திறைசேரியிடமிருந்து கொடுக்கப்படுகின்ற வரையறுக்கப்பட்ட நிதியத்தால் புதிய பயிற்சி நிலையங்களின் நிர்மாணமானது வரையறுக்கப்பட்டிருந் ததுடன் நிலையங்களின் மீள்புனரமைப்பு மற்றும் முன்னேற்றத்தின் செயல் முறையானது நிதியங்களின் கிடைப்பனவு வரையறுக்கப்பட்டமையால் தாமதமாக்கப்பட்டதுடன் அதனால் பயிற்சிக்கு சேர்த்தல் | பயிற்சிகள் இயலளவை முன்னேற்றுவதற்கும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிரத்தி செய்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விகிதமானது குறைவடைந்தது. | |
| (இ) | தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் 120 நாட்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொனறாகலை மாவட்டத்திலுள்ள தச்சு மற்றும் கட்டுமானத்துறையிலுள்ள 60 பயற்சியாளர்களிற்காக பயற்சியினை வழங்குவதற்கு ரூபா 6 மில்லியன் தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்ததுடன் பயற்சியொன்றிற்கான ரூபா 100,000 ஐ செலவழிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும் 37 பயற்சியாளர்கள் மாத்திரம் பாடநெறியை பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய தொழில்சார் தகைமைகளை மீது சான்றிதழ்கள் பெறப்பட்டிருந்ததுடன் ரூபா 155,400 கிரயமானது மதிப்பிடப்பட்ட கிரயத்தை விஞ்சி பயிற்சியொன்றிற்காக செலவழிக்கப்பட்டிருந்தது. | திறமை வாய்ந்த ஊழியர் துறையிலுள்ள சந்தை கேள்வியினை பூர்த்தியாக்க முடிந்திருக்க வில்லை. | 120 நாள் நிகழ்ச்சித் திட்டமானது 2018 ஆம் ஆண்டில் மொனராகலையில் ஒழுங்கமைக்கப்பட்டு தொடங்கப்பட்டதுடன் தச்சு மற்றும் கட்டுமான வேலை பாடநெறிகளானது ஒரு குழுவிற்கான பயிற்சியாளர்களின் இலக்கிடப்பட்ட எண்ணிக்கை 20 ஆகவிருந்ததுடன் மொத்த பயிற்சிகளின் எண்ணிக்கை 40 ஆக இருந்தமையால் பயிற்சிகளின் எண்ணிக்கை மீதான கணக்காய்வு அவதானிப்புக்களால் சீரமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கான உட்சேர்க்கை 37 ஆகவிருந்ததுடன் உபசேர்க்கை 92.5% சதவீதமாக இருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட பாதீடு ரூபா 8.78 மில்லியனாக இருந்ததுடன் ஒர யணிக்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 219,500.00 ஆக இருந்ததுடன் ஒரு பயிற்சிக்கான உள்ளபடியான கிரயம் ரூபா | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டை அடைவதற்கு கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது. |

155,400.00
ஆகவிருந்தது.

**3.4 விளைவற்ற / குறைப்பயன்பாட்டுடைய வளங்கல்**

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| அஹன்கமயில் காணப்படும் ஹோட்டல் பாடசாலையினை புனரமைப்பதற்கு 2019 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 124.69 மில்லியன் தொகையொன்றை இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபையானது செலவழித்திருந்ததுடன் சுற்றுலாதுறையுடன் தொடர்புடைய 04 டிப்ளோமாக்களின் நடைமுறை பயிற்சியை வழங்கும் நோக்கத்துடன் இதனை சுற்றுலா ஹோட்டலாக மாற்றுகின்றது. ஹோட்டல் பாடசாலையினை மீள் புனரமைப்பானது சாத்திய வள கற்கை இல்லாமல் மேற்கொள்ளப்பட்ட மையால் ஹோட்டல் கட்டிடமானது சுற்றுலா துறையுடன் தொடர்புடைய தொழில்சார் பயற்சிக்காக வசதிகளை வழங்காமல் அதிகார சபையின் மீளாய்வு கூட்டங்களிற்காக பயன்படுத்தப்பட்டது. மேலும் ரூபா 24.24 மில்லியன் கிரயத்தில் 2016-2019 ஹோட்டல் பயன்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்ட பயிற்சிஉபகரணம் மற்றும் ஏனைய உபகரணம் மீளாய்வாண்டின் இறுதியளவில் தேவையான நோக்கத்திற்காக பயன்படுத்தாமல் விளைவற்றிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை அடைய முடிந்திருக்கவில்லை | பல நேரங்களில் எடுக்கப்பட்ட முயற்சிகள் பொது தனியார் பங்குடமையின் கீழான மாதிரி ஹோட்டலாக இந்த இடத்தை பயன்படுத்துவதற்காக பயற்சிகளை நடாத்துவதற்கு தவறியிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட நடைமுறை பயிற்சியை வழங்குவதற்கு ஹோட்டல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| அமுலாக்கல் முகவர்களிலுள்ள பயிற்சி நிலையங்களின் சிவில் வேலைகளிலுள்ள காலதாமதங்கள் | எஸ்எஸ்டி இன் ஒட்டுமொத்த இலக்கு அடைய முடிந்திருக்க வில்லை. | நிதிக்குறைவு, ஒப்பந்தக்காரர்களின் செயற்திறமையின் போன்ற பல்வேறு காரணங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. | அமுல்படுத்தல் முகவர் ஒவ்வொன்றின் முகாமைத்துவமானது பயற்சி நிலையங்களின் நிர்மாண, புனரமைப்பு மற்றும் நவீனமயமாக்கப் பட்ட வேலைகளின் தேவையான காலதாமதத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை |